மாண்புமிகு பேரவைத் தலைவர் : மஞ்சளுக்கும் சாயத்திற்கும் என்ன சம்பந்தம்? சாயம் பம்பாயிலிருந்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: சாயப்பொருள்களின் மூலப்பொருள் மஞ்சள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கல்கத்தவுக்குப் போகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இல்லையென்றாலும் வருகிற ஆண்டுகளிலாவது அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மாவட்டத்தில் இப்பொழுது இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறோம். தேவைப்பட்டால் கவனிப்போம். ஏனெனில் வெளி மாநிலங்களிலிருந்து நாம் வாங்கி வருகிறபடியால் விலை அதிகமாக இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே கடலூரில் 'வானவில்' சாயத் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் உற்பத்தியாகிற நூலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி சாயம் தயாரிக்கிற சூழ்நிலையிருக்கிற காரணத்தால், கோவை மாவட்டத்தில் சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திலும் கேட்பார்கள். அடுத்து, திரு. வெள்ளைச்சாமி.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்பொழுது பெரியார் மாவட்டத்தில் துவங்க உத்தேசம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேறு எங்காவது துவங்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா எண். 100.

ஓசூர் கால்நடைப் பண்ணை.

*வினா எண் 100—திரு. டி. வேங்கட்டரெட்டி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் கால்நடைப் பண்ணையில் செயல்படுத்தப்படவுள்ள இந்தியா—பிரிட்டன் திட்டத்தின் கீழ் வரும் புதிய திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) ரூ. 452.11 லட்ச செலவில் முதலில் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசின் யோசனைப்படி திட்டத்தின் செலவினைக் குறைத்து ரூ. 300.16 லட்சத்திற்கான திருத்தப்பட்ட திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. நிதி பற்றாக் குறையின் நிமித்தம் இந்தத் திட்டத்தை ஏற்பதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்தது, இத்திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பல்வேறு நன்மைகளைக் கருத்திற்கொண்டு மீண்டும் பரிசீலனை செய்து இத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென மத்திய அரசினை வற்புறுத்தியிருக்கிறோம்.

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்கல்.

குறுகியகால வினா எண். 1 திரு. மீ. வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளை மாநகராட்சி ஆக்கும் எண்ணம் இந்த ஆண்டில் ஏதாவது உள்ளதா ?

(ஆ) நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சி ஆக்குவதற்கு ஏற்கெனவே அரசு முடிவு எடுத்துள்ளது. குடியரசு தலைவருடைய முன் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இதை பற்றிய சட்ட வடிவம் பட்ஜெட் தொடரில் கொண்டு வர இருக்கிறது. மற்ற நகராட்சிகளை மாநகராட்சி ஆக்க செயல்குறிப்புகள் ஏதும் இப்பொழுது அரசிடம் இல்லை.

[முற்பகல் 10-10]

திரு. மீ. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகராட்சி, மாநகராட்சியாக என்ன அடிப்படையில் ஆக்கப்படு கின்றது. 95 லட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ள நாகர் கோவில் நகராட்சியை மாநகராட்சியாக்க ஏதாவது தடங்கள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மற்ற நகராட்சிகளை மாநகராட்சியாக ஆக்குவதற்கோ, எல்லா நகரியங்களையும் நகராட்சிகளாக ஆக்குவதற்கோ, எந்தவிதமான கூடுதலோ அல்லது கழித்தலோ கூடாது என்றும், மக்கள்தொகை கணக்கெடுப்பு முடியும் வரையில் செய்யக்கூடாது என்று மத்திய அரசு ஆணைபிறப்பித்திருக்கிறது. எனவே 30-6-1981க்குப் பிறகுதான் அதைப்பற்றி எல்லாம் செய்யும்நிலையில் இருக்கிறோம் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அதற்கு பின்னால் பரிசீலிக்கலாம்.